பெயர்: __________ தேதி: _________

# வாக்கியத்தில் இடம் பெறும் முதல் வேற்றுமையை எடுத்து எழுது.

1. குழந்தை அழுதது.
2. தாய் சொல்லைத் தட்டாதே.
3. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.
4. அறம் செய்ய விரும்பு.
5. சுத்தம் சுகம் தரும்.
6. அச்சம் தவிர்த்து வாழ வேண்டும்.
7. மீனவர் வலை வீசினார்.
8. திருக்குறள் உலகப்பொதுமறை நூல் ஆகும்.
9. தமிழ் மொழி இனிமையானது.
10. சிட்டுக்குருவி பறந்து சென்றது.
11. கோதுமை சத்தான உணவாகும்.
12. நாள்தோறும் உடற்பயிற்சி செய்.

குழந்தை,

பெயர்: __________ தேதி: __________

## வாக்கியத்தில் இடம் பெறும் முதல் வேற்றுமையை எடுத்து எழுது.

1. மழை பொழிந்தது.
2. மீனா இரவு உணவு உட்கொண்டாள்.
3. ஆசிரியர் இனிய கதைகளைக் கூறினார்.
4. மல்லிகா வீட்டுப்பாடம் எழுதினாள்.
5. தினேஷ் மட்டைப்பந்து விளையாடினான்.
6. மீன் ஆற்றில் துள்ளிக் குதித்தது.
7. யானை மிகுந்த பலம் வாய்ந்த விலங்கு.
8. கவிஞர் கவிதை இயற்றினார்.
9. சிங்கம் காட்டின் ராஜா ஆகும்.
10. மின்விசிறி வேகமாகச் சுற்றியது.
11. வட்டம் வரையுமாறு ஆசிரியர் கூறினார்.

மழை,

பெயர்: __________ தேதி: _________

# வாக்கியத்தில் இடம் பெறும் முதல் வேற்றுமையை எடுத்து எழுது.

1. கரும்பு இனிப்புச் சுவை மிக்கது.
2. பொங்கல் திருவிழா நடைபெற்றது.
3. கேரளா அழகிய சுற்றுலாத் தளமாகும்.
4. காந்தி நாட்டிற்காகப் பாடுபட்டவர்.
5. நெல் இந்தியர்களின் முக்கிய உணவு.
6. கீரை உண்பது உடலுக்கு நல்லது.
7. மரங்கள் மண் அரிப்பைத் தடுக்கும்.
8. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
9. பாரதி கவிதை பாடுவதில் வல்லவர்.
10. அமுதா ஓவியம் வரைந்தாள்.
11. இராமன் காட்டிற்குச் சென்றான்.

கரும்பு,